# அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

1-9-61 (வெள்ளி) விலை 16 காசு


# காங்கிரஸ் ஆட்சியின் கட்டாரி!

கூறளுண்டு, எம் நெஞ்சில் அருளுண்டு, எமக்கு நல் இல்லுண்டு, அங்கே இனிய தமிழுண்டு, அதையுண்டு அன்பே! அத்தான்! என்றழைக்கும் அன்புண்டு, அநுவடித்தெடுத்த மழலைகள் உண்டு, அம்மா! அப்பா! ஆத்தாடி என அவையழைக்கும் குரல் கேட்டு குவலயமே ஈடாகாது என மகிழும் பாட்டியுண்டு, பொக்கை வாய் திறந்து அப்பாட்டி சொல்லும் வீரமிகு கதைகள் உண்டு, அவையொவ்வொன்றும் எமது பழம் புகழின் கற்கண்டு! சொற்செண்டு!—என்று சொல்லி மகிழும் என்னருமைச் சகோதரர்காள்! எழில்மிகு நாட்டினை இழந்தோம் — பொழிலில் புயலாட்சி நடாத்திடச் சகியோம்—புழுதியாகிப் போனது போதும்—இனிப் பொறுக்கோம் என்றுசூளுரைக்கும் தோழர்காள்! யாருண்டு எமக்கு நிகர், எங்கேயுண்டு இங்தளவுக்கு இலக்கியம், வளையாபதியும் குண்டலமும் வள்ளற் கருத்துக்கள் துள்ளும் சிலம்பும் தூய மணிமேகலையும், சொல்லொன்று ஆயிரம் படித்தேனாய் இனிக்கும் அழகுறு அகநானூறும், ஆற்றல் மறவர் யாம்! யாம்என்றுமுழக்கும்புறநானூறும் எட்டுத் தொகையும், பதினெண் கணக்கும், நிகண்டும் நினைத்துப் பார்க்கமுடியாதளவுக்கு இலக்கண வரம்பும் எந்தாய் மொழி தமிழுக்கன்றோ—உண்டு. பண்டு இதுநான்கு மொழிக்கும்அன்னை—என்று ஆர்ப்பரிக்கும் அருந்தமிழ்ப் புலவர் பெருமக்காள்!

அன்றோர் நாள் தமிழைப்பாடினாய், என் தலைதனைக் கொண்டு போய் வாழ்வீர் புலவீர் என்று வாழ்த்திய குமணனும்; தமிழ்ப் புலவன் என்றால் சரியாசனம் கொடு என்று போற்றிய பாண்டியனும் சேரனு ; ஔவையை அழைத்துப் பாட்டி! பார்! என் படைத்திறனை என்று காட்டிய காவலனையும், கண்டது இம்மாநிலம்—கவியரசன் கம்பனைப் போற்றினான் குலோதுங்கன், சேக்கிழார் வென்றார் செல்வந்தர்களை, அரும்பதவுரைக் காண அவர் அழித்தார், இவர் அழித்தார் தம் களஞ்சியத்தை, என்றெல்லாம், நாவாரப் பேசும் நாவலரே! பாவலரே!! எப்படி உம்மிடம் உரைப்போம் இக்கொடுமையை? சொல்லவும் வரவில்லையே துணிச்சல்!

பசுவை அம்மாவென்று—அழைக்கின்றது கன்று அதைக்கண்டு, தன் தாயையும் 'அம்மா' என்று அழைத்தவன், தமிழன்; அவனே முதன் முதலில் மொழிக் கண்டான், மொழிக்கு வடிவம் கண்டான், 'அ' கண்டான், 'ஆ'வென்ன எழுதினான், 'இ' என்றான்,

எம்மொழியிலேனும் உளதோ எமது தமிழிலுள்ள 'ழ' கரமும். 'ய' கரமும் என்று எழுதும் ஆராய்ச்சி வல்லுநரே! அன்னை தமிழின் புகழ்பாடியே சாகலாமே என்றுகூறும் அருந் தமிழ் வல்லுநரே!! எப்படி இதனை உமக்கு எடுத்துரைப்போம்?

அன்னையின் மார்பில் கொடுவாள் என்றால், அலியின் மனம் கூடப் பொருமுமே! புலிநிகர் மாந்தரான உமக்கு எப்படி இக் கொடுமையை எடுத்துரைப்போம்!! மார்பிலே அல்லவே யாள்—அதுகூட நல்லதாயிற்றே ஒரு இடத்தில் தைத்து உயிரைப் போக்குமே!— காலொரு பக்கம், கையொரு பக்கம், விரல் ஒரு பக்சம், நகம் ஒரு பக்கம், விழியொரு பக்கம், மொழி பேசும் நா இன்னொரு பக்கம், இப்படிச் சதை சதையாக அங்குலம் அங்குலமாகத் கழித்துச் சிதைந்து 'அன்னை'யின் உடலும் உருவும் இல்லாமல் அழிப்பாராமே! அதற்கென்ன செய்யலாமென ஆலோசனைசெய்தனராமே!!

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ ஐ, ஒ, ஓ, ஔ, ஃ என்று சொல்லும்போதே இசையெழுமே—அந்த இசையைக்கொல்வதாமே? ங ஞ ன ந ம ண ய ட ல வ ழ எ எனும்போது, வீணையொலி எழுமே—அந்த வீணையைத் துண்டாக்கித் தொலைப்பதாமே?

கசடற என்று சொல்லும் போதே புலிபோலச் சீறும் வீரம் கொப்பளிக்குமே—அந்த வீர மொழியினை வீணர்தம் வீம்புக்கு பலி கொடுப்பதாமே? ஐயகோ மறைக்கிறதே, கண்ணீர் திவலை திவலையாக- நாடிழந்தோருண்டு நானிலத்தில், வீடிழந்தோருண்டு பூமியில், மாடு மனை போயிற்றென்று அலைந்தோருண்டு, ஆனால் மொழியை இழந்தோர் உண்டோ எனின் இல்லை எனுமே வரலாறு! இல்லாத ஒன்றை யன்றோ, இருமாப்பு கொண்டோர் செய்ய எண்ணியிருக்கின்றனர்!! அழிவதாமே தமிழ் — ஒழிக்கப்படுவதாமே தமிழ் எழுத்துக்கள் — அந்த இடத்தில் உட்காருவதாமே தேவநாகிரி.

என்ன? என்ன! எவன் சொன்னவன்? எங்கே அவன்!!—என்று கனல் கக்கும் கண்களுடன், நீவீர் கேட்பது, புரிகிறது. இப்படிப்பட்ட யோசனை அரும்பிய இடம், ஏனோ தானோக்களும் ஏதுமறியாததுகளும் கூடிய இடமல்ல. நாடுகாக்கும் மாமேதைகளான முதலமைச்சர்கள் அண்மையில் டில்லியில்கூடிப் பேசினரென்று கேள்விப்பட்டோமன்றோ! அதுபோதுதானே, நமது திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் தடை விதிக்கப்பட வேண்டுமென்று வட நாட்டு வல்லாளர்கள் வலியுறுத்தியதாகக் கேள்விப்பட்டோம்!! அந்தக் கூட்டத்திலே, அந்தப் பேச்சு வரக் காரணம் என்ன என்பதற்கான விபரங்கள் தெரிய ஆரம்பித்திருக்கின்றன. அடுத்துப் போடுகிறோமே மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்—அதற்குப் பதினாயிரம் கோடி ரூபாய்க்கு மேல் செலவென்கிறோமே — மக்களிடமிருந்து 1700 கோடி வரியாக வசூலிக்க வேண்டுமென்கிறோமே—சாத்யமா— முடியுமா—இதுநாள் வரை நாம் செலவழித்த 7000 கோடியால் என்ன கிடைத்தது மக்களுக்கு—என்றன்றோ, ஆராய்வார், நாடாளும் மகிபர்கள்! அதைப் பார்த்துக் கொள்ள 'டில்லி' யிருக்கிறது—அங்கே ஒரு நேரு இருக்கிறார்—என்று எண்ணினரோ, என்னவோ, அந்த முதலமைச்சர்கள் மாநாட்டில் முழுக்க முழுக்க இந்திய ஐக்கியம் பற்றியே விவாதிக்கப்பட்டதாம்!! அசாம் முதல்வரும், ஐக்கிய மாகாணத்தவரும் மராட்டிய சாவனும், குஜராத்திய கோமகனும், வங்க டாக்டரும், பீகார்ப் பெரியவரும், ஒரிசா பட்நாயக்கும், ஆந்திர சஞ்சீவிய்யாவும், மைசூர் ஜெட்டியும், நமது காமராசரும், 'எப்படி இந்தியாவைக் கட்டிக் காப்பது'' என்பது பற்றிக் கவலையோடு, ஆலோசனைகள் நடாத்தினராம். இந்தி

உள்ளே காண்க



# அறப்போர்

## பட - விளக்கப் போட்டி !

சென்ற இதழில் வந்த நிபந்தனைகளை, பட விளக்கப் போட்டியில், கலந்து கொள்வோர் கடைப்பிடிக்க வேண்டுகிறோம்.

8-ந் தேதிக்குள், கட்டுரைகள், எமக்கு வந்துசேர வேண்டும்.

ஆய்வாளர்களாக, முரசொலி பொறுப்பாசிரியர் மாறன், சேலம் தோழர் க. இராசாராம், அறப்போர் சார்பில்—அச்சிடுவோரான முல்லைசத்தி, ஆகியோர் இருந்து, பரிசுக்குரியதைத் தேர்ந்தெடுப்பர்.

ஆசிரியர்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாவை ஒன்றாகவே வைத்திருக்க வேண்டும்! அதற்கென்ன செய்யலாம்!!—என்று அதி சிரத்தையோடு, பேசினார்களாம். அரும்புக்கு மணம் வருதல் இயற்கை; இரும்புக்கும் எழில் மணம் ஏற்பட வேண்டுமெனின் இயலுமோ? என்னமோ, வெள்ளையன், தன்னுடைய ஆதிக்கத்தைச் சரிவரச் செய்ய, மாகாணங்களை உருவாக்கி, அம்மாகாணங்களை நிர்வகிக்க ஒரு டில்லியை அமைத்தான். அவன் தந்த 'ஆட்சி'யில மர்ந்த, சுதந்திர வீரர்கள், அதே ஆட்சியையும் அவன் உண்டாக்கித் தந்த இந்தியாவையும்—கட்டியாளக் காண்கின்றனரே கனவு? கனவோடு மட்டுமா!—நனவாக்கவும் முயல்கின்றனரே! அதற்கென நயவஞ்சகத் திட்டங்களும் தீட்டுகின்றனரே!!

மதிமுக முதலமைச்சர் ஒருவர் மொழிந்தாராம், "இந்தியாவில் எங்கு பார்த்தாலும் மொழியின் அடிப்படையில் பேசுகின்ற ஒரு தன்மை பரவி வருகிறது. இதனால் பொது மொழியான இந்தியை எதிர்க்கும் நோயும் பரவி வருகிறது. இதைத் தடுக்க வேண்டுமானால் இந்தியா முழுதுக்கும், ஒரே வடிவம் உண்டாக்கப்பட வேண்டும். அப்போது மொழி யாவும் ஒன்றாகும். ஒருவருக்கொருவர் பழகவும், பேசவும் இலகுவாகும். எந்த எழுத்தை மேற்கொள்ளலாமென்றால்' தேவநாகிரியை வைத்துக் கொள்ளலாம்", என்பதாக. இமய முதல்—குமரி வரை தேவநாகிரி லிபியாம். அதனால், 'தேசீயம்' கொழுந்துவிட்டு வளருமாம்!!

தேவநாகிரியா — உருதுவா, என்பதில் இன்னும் வடக்கே சண்டை யுண்டு. தேவநாகிரி லிபியென்பது—சமஸ்கிருத மொழியின் எழுத்தாகும். அதனை தமிழ் ஏற்க வேண்டுமாம்! நாம் ஏற்க வேண்டுமாம்! அதனால், பிரிவினை மனோபாவம், குறையுமாம்!!—இந்தப் பேச்சு வந்தபோதுதான், திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தடை செய்வது பற்றியும் ஆலோசித்திருக்கிறார்கள். ஏனெனில், நாமிருக்கும் வரை, இந்த நயவஞ்சக நாடகம் நடக்க, இடம் கொடோமல்லவா? எமதுயிர் போயினும் இழக்கோம் எம் மொழியை என்று வீரப்பண் பாடுவோர் நாமன்றோ! விழியா—மொழியா என்பீரேல், மொழிக்காக விழியையும் இழப்போம் என்றுரைப்போர் நம்மவரன்றோ!!

அதனாற்றான், ஆலோசனை, செய்திருக்கின்றனர் — எதிர்க்குமே, இந்த தி. மு. க. என்று. 'எதிர்த்தால், தடை போட்டுவிட்டு, ஜாம் ஜாமென நாம் செய்யவேண்டியதைச் செய்வோம்", என்றும் பேசியிருக்கின்றனர்,

காசு—தராசு—அங்காடி—அரசகம் முதலிய பல்வேறு துறைகளில், சாகச மோகினிபோல் சர்க்கரைக்குள் நஞ்சு போல, இந்தி, திணிக்கப்பட்டுக்கொண்டு வருகிறது! இனிமேற்பட, எழுத்துக்கள் யாவும் இந்தி வடிவாகுமாம்...இது எங்கே கொணடு போய்விடும் என்பதை அறியாதவர்களோ, நாம்? 'என்னப்பா, உன் உடலை என்னிடம் கொடு, இந்த அரிவாளால் கொஞ்சம் கொஞ்சமாக அறுத்தெடுத்து, வேக வைத்து உன் இலையில் பரிமாறுகிறேன்' என்றாலும், ஒருவன். இலையில் பரிமாறப் போவதோ, நம் சதை! அதனைப் பரிமாறுகிற அளவுக்கு உடலில் உயிர் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டுமே!! அதேபோல, இந்த அரசியல் எத்தர்களாக மாறிவருவோரும், கூடிப் பேசுகின்றனர், தேவநாகிரி லிபியை எல்லா மொழிகளும் ஏற்கும்படி செய்துவிட்டால், இந்திய ஐக்கியம்' நிலைக்கும், என்று.

இப்படி மொழிகளை அழித்து உருவாக்க வேண்டுமென்கிற இந்திய ஐக்கியத்தால் என்ன நன்மை? இப்போது ஒவ்வொருவரும் தன் மொழி, தன் கலை, தன் னாடு என்று பேசுவதால் தான் என்ன தீமை?-பதில் தரவேண்டுமன்றோ, இப்பாரத புத்திரர்கள்! என்ன பதிலை மொழிவர்? பெரிய நாடாக யிருக்கும்—பெரிய நாட்டைச் சேர்ந்தவர்களென்றால், வெளியே சொல்லிக் கொள்ளப் பெருமையாயிருக்கும்-ஏ, அப்பா! இந்தியா ரொம்ப் பெரிய தேசம். அதனுடைய பிரஜை இவர், என்றால், ஏனையோர் வியப்படைவர்—இதுதானே காரணம், இந்திய ஐக்கியம் பற்றி இவர்கள் ஆர்வம் காட்டுவதற்கு! இதைத்தானே, ஏக் இந்தியா பேசுவோரும், இப்போது காரணமாகக் காட்டுகிறார்கள்!! பெருமை என்றால் என்ன?—ஒட்டகம் மிகப் பெரியதுதான்! கழுத்தை நீட்டினால் பாதித் தென்னையளவுக்கு வரும்!! அதனால் சிறுத்தைக்கு உள்ள மவுசு, சிதறுண்டு போமோ? மிகப் பெரியதுதான் பூசணிப்பூ! சின்னது என்பதால் சிறுமல்லியின் மணம் சிந்தப்படாததாகுமோ? மிகப் பெரியதுதான் கடல்! இளநீர் இருக்கும் காய், சிறுசுதான்—அதனால் இளநீரை விடச் சிறந்தது என்பரோ, கடல் நீர்? சிறிசு—பெரிசு என்பதால் என்பதால் அல்ல, பெருமை வருவது! அது எப்படி வாழ்கிறது, அங்குள்ள மக்களின் வாழ்க்கை நிலை என்ன அவர்களுடைய மனவளம் எத்தகையது என்பதே, பெருமையைத் தரக்கூடியதாகும்!! பெரிய பூமிப் பரப்புக்குத்தான் மதிப்பு என்பது இறந்து போன நூற்றாண்டுகள், ஏற்றுக் கொண்டிருந்த தத்துவம்.

செங்கிஸ்கான் எவ்வளவு தூரம் வென்றான்—அக்பரின் ஆட்சி பரவிய தூரம் எவ்வளவு—நெப்போலியன் வென்ற நாடுகள் எத்தனை —என்பதை வைத்து, புகழாரம் போடப்படும், காலமல்ல, இது. இப்போது ஒரு நாட்டின் பெருமை அந்நாட்டின் எண்ண வளர்ச்சி—வாழ்க்கை வளம் ஆகியவற்றிலே தான் இருக்கிறது.

அதிலும் உலகப் பொதுச் சபையாம் ஐ. நா. மன்றம் ஏற்பட்டு அங்கே—எல்லை—மக்கள் தொகை பரப்பளவு எவ்வளவானாலும் ஒரேவிதமான அந்தஸ்து தான் என்று ஏற்பட்டுவிட்ட பிறகு 'பெரிசு, சிறுசு' என்கிற பேச்சுக்கே பொருளில்லை என்றாலும் இவர்கள் பேசுகிறார்கள்!

பெரிசாக வாழ வேண்டும் என்பதற்காக பிடி குரல்வளையை—அடி அவனை—இடி மொழியை என்று கூத்தாடுகிறார்கள்!!

அப்படிச் செய்ய இவர்கள் யார்? 'இந்தியா' என்பதை அகிலம் உள்ளளவும், ஆழ்கடல் உள்ளளவும், சந்திர சூரியர் உள்ளவும் கட்டிக் காக்க இவர்கள் யார்? ஆண்டவன் என்கிறார்களே, அவனால் அனுப்பப்பட்டார்களா! அல்லது ஆதிமந்திரம் எதையாவது வேத முனிவர்கள் இவர்களுக்குச் சொல்லிக் கொடுத்துவிட்டுப் போனார்களா!! அப்படிச்செய்யாவிட்டால், ஆகாயம் சீறும், இடி தலையில் விழும், எரிமலை குமுறும், பிரளயம் ஏற்படும் என்றுயாராவது முனிபுங்கவர்கள் சாபமிட்டிருக்கிறார்களா? இது மக்களுடைய காலமாகும்! சரியோ, தவறோ மக்கள் மன்றம் பெரும்பான்மையாகக்கூடி ஒரு முடிவெடுத்துவிட்டால், அதன்படி போகவேண்டிய ஜனநாயக காலமாகும்!

அந்த மக்களுடைய மனதை அடிக்கவும், உதைக்கவும் அவர்தம் மொழியைச் சிதைக்கவும், சீவுவேன் தலையை, அறுப்பேன் நாவை, பூட்டுவேன் சிறையில் என்றுசொக்கரிக்கவும் இவர்கள் யார்? இஸ்ரேல் நாட்டுச் சுதந்திரம்—எகிப்துக் குள்ளிருக்கும் சூடான் தனித்து வாழவேண்டிய அவசியம்—காங்கோவுக்கு தரப்பட வேண்டிய சுதந்திரத்தின் முக்கியம்—ஆகியவை குறித்து அன்பர் நேரு அவர்களைப் பாராட்டுகிறோம்—உரிமை எழுச்சிக்கு ஆதரவு தருகிறார், என்பதால்!!

அப்படிப்பட்டவரின் சகாக்கள்—அப்படிப்பட்டவரின் காங்கிரஸ் கட்சி—கட்டாரியை வீசுகிறது, மக்கள் மீது. மொழியை அழிப்பாராம்—கேட்டால், தடைபோட்டுச் சிறையில் பூட்டுவாராம்—என்னே மனிதநெறி! எங்கே உத்தமர் காந்தி வளர்த்த அன்பு நெறி!!

"பரலிநெல்லையப்பரே! என் மனம் குமுறுதய்யா-என் தமிழைவிட ஒரு மொழி மேலாக இருக்கிறதென்று கேட்டால்?" என்று கவியரசர் பாரதியார் அவர்கள் ஒருமுறை கடிதம் தீட்டினர்களாம்.

"செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்தேன்வந்து பாயுது

11-ம் பக்கம் பார்க்க


## நன்றி அறிவிப்பு

27—8—61ல் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் காஞ்சியில், எனது மகள் மணிமேகலைக்கும், திரு. கமலக் கண்ணனுக்கும் நடைபெற்ற திருமணத்தில் கலந்துகொண்டு, வாழ்த்துரை வழங்கிய தலைவர்களுக்கும், தோழர்களுக்கும், மற்றும் தந்தி வாயிலாக வாழ்த்துச் செய்திகள் அனுப்பியும், பரிசுகள் வழங்கியும், எங்களை மகிழ்வித்த தோழர்களுக்கும் எனது உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

அன்பன்,

சி. வி. எம். அண்ணாமலை,
செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. செயலாளர்.



# நான் கண்ட அண்ணு

## அரங்கண்ணல்

### - 5 -

ஏதை நினைப்பது? எதை மறப்பது? என்றே புரியவில்லை! நினைவலைகள் ஒன்றின் மீதொன்ருக மோதிக்கொண்டேயிருக்கின்றன. நான் 'விடுதலை'யில் பணிபுரிந்த காலம் வேகம் நிரம்பிய பலநிகழ்ச்சிகளைக் கொண்டதாகும். காந்தியடிகள் மரணம்—கருஞ்சட்டைப் படை தடை—இந்தி எதிர்ப்பு—குறள் மாநாடு—தூத்துக்குடி மாநாடு—ஈரோடு தனி மாநாடு—அழகிரியண்ணன் சாவு இப்படிப் பல சம்பவங்கள்! கடைசியாக அய்யாவின் கலியாணம்!!

கருப்புச் சட்டைப்படை இயக்கம் அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்டதும் அதனைக் கண்டிக்க சென்னை மெமோரியல் மண்டபத்தில் ஒரு கண்டன மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அண்ணு அவர்கள் இம்மாநாட்டிற்கு வரமாட்டார்கள்—அவருக்கு 'சினிமாத்' தொடர்பு அதிகமாகி விட்டது—தடை என்ருல் பயப்படுகிற கோழை அவர் என்றெல்லாம் அய்யாவை துதிபாடி வாழ்ந்தவர்கள் கணித்துக் கொண்டிருந்தார்கள்.

ஆனுல் மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது திடீரென ஒரு கருஞ்சட்டையுடன் அண்ணு அவர்கள் நுழைந்தார்கள்! அதுநாள்வரை கருஞ்சட்டை அணிதலில் ஆர்வம் காட்டாத அண்ணு, தடையென்றதும் 'தயார் நான்' என்று சொல்வதுபோல கருப்புச் சட்டையுடன் காட்சியளித்ததைக் கண்ட மக்கள் எழுப்பிய கையொலி இன்னும் மனக்கண்ணில் சதிராடுகிறது!!

அண்ணுவைக் கண்டதும் அய்யா அவர்கள் மிக மிக களிப்பு நிரம்பிய நிலையில் தன் குரலை மாற்றி அதே சமயம் சோகம் இழைந்தோடும் வகையில் "அறிஞர் அண்ணு..." என்று அழைத்துப் பேசினுர்கள். அப்படிப் பேசும்போது கொஞ்சம் நிறுத்தி தன் கண்ணில் வரும் கண்ணீரை மேலாடையால் துடைத்துக் கொள்வது போலச் செய்தார்கள். உண்மையில் இது எல்லோருடைய உள்ளத்தையும் உருக்கி விட்டது! அய்யாவே கண்ணீர் வடிப்பதென்ருல்? அவரை எப்பேற்பட்ட நிலையில் வைத்துக் கொண்டாடினேம் நாம்! உண்மையில் இந்த சமூகத்தில் பகுத்தறிவு பரவ வழிகாட்டிய பெரியார் என்பதை எதிர்காலம் கூட மறுக்காதே?

அப்படிப்பட்டவர் மனம் புணுகி கண்ணீர் விடுமளவுக்கு இந்த அண்ணு இப்படி நடக்கிருரே என்று எண்ணிச் சலிப்படைந்தோரும் உண்டு! அய்யா அவர்கள் கண்ணீரைத்துடைத்த போது திருவொற்றியூர் டி. சண்முகம் (எப்போதும் நமது கூட்டங்கள் என்ருல் முதலில் உட்கார்ந்திருப்பவரல்லவா அவர்) முகம் போன போக்கையும் அழும்நிலையிலிருந்ததையும், மேடையில் பேச்சுகளை எடுத்துக் கொண்டிருந்த நான் கவனித்தேன்...

குறள் மாநாடு எனும் பெயரில் பிராட்வே டாகீசுக்குஅருகிலுள்ள ஒரு திடலில் ஒரு மாபெரும் மாநாடு நடந்தது. நமது திராவிட முன்னேற்றக் கழகத்தில் இன்று நடிக நண்பர்கள் வந்து பணியாற்றுவதைப் பழிக்கின்ற பெரியார் அவர்கள் அம்மாநாட்டின் பக்கம் சினிமா நடிகையான தவமணிதேவி என்பார் வந்து போனதுபற்றி எவ்வளவுமகிழ்ச்சியடைந்தார் என்பது எனக்குத் தெரியும். சிங்களக் குயில் என்று பெயர் பெற்று 'பேர் போன' நிலையிலிருந்த அந்தஅம்மணி, அதன் பிறகு இரண்டொரு தடவை, அய்யா அவர்களை அவர்களது மீரான் சாயபு இல்லத்தில வந்து, கண்டு சென்ருர்கள்.

நமது கழகத்தின் மீது மிகவும் ஆர்வமும் அந்த அம்மணி அப்போது காட்டினுர்கள்.

"என்னங்க! எவ்வளவு பெரிய கார் வைச்சிருக்காங்க தெரியுமோ? நம்ப தெருவிலே திரும்ப முடியலீங்க!..." என்று அய்யா அவர்கள் குறிப்பிட்டதுண்டு, மகிழ்ச்சியோடு.

உண்மையில் அப்படிப்பட்ட கார் வைத்திருப்பவர்கள்கூட நம்மை திரும்பிப் பார்ப்பார்களோ அவர்களின் மதிப்பு கிடைக்குமோ அவர்களெல்லாம் நம்மோடு சேர்வார்களா என்று நாம் ஏங்கியிருந்த காலம் அது! இந்து — மெயில் — மித்திரன் போன்ற ஏடுகளில், எங்கேயாவது இரண்டு வரி போட்டு விட்டால் அதை சிகப்பு இங்கியால் "மார்க்" செய்து பத்திரப்படுத்தி வைப்போம்—

"பார்த்தீங்களா, சார்! இன்னைக்கு இந்துவிலே நம்மைப் பற்றி எழுதியிருக்கிறது" என்று ஒருவரையொருவர் பார்க்கும் போது ஏதோ அதிசயமான ஒரு சம்பவம் நடந்துவிட்டது போலச் சொல்லிக் கொள்வோம்!! அந்தக் காலம் எங்கே? ஏடுகள் நம்மைப் பற்றிய செய்திகளையும் தலையங்களையும் போடத் துடிக்கும் இந்தக் காலம் எங்கே? நம்மைப்பற்றி பரபரப்பான செய்திகளைப் போட்டு பத்திரிகைகளை வளர்த்துவிடலாம் என்று மன்ருே இன்று பல ஏடுகள் உள்ளன. அந்தக் குறள் மாநாட்டின் மூலம் ரூ. 10000 வரை மிச்சமாயிற்று. அத்தொகையைக் கொண்டு குறளை வளர்க்கப் போவதாக அய்யா சொன்னுர்கள். தோழர் திருக்குறள் முனுசாமி போன்ருேர்கூட குறள் வளரும் என்று மிக மிக ஆவலோடு பல ஆசைகளை வளர்த்துக் கொண்டார்கள் அவ்வளவு ரூபாய் மிச்சத்தைக் கண்டதும்

தூத்துக்குடியில் நடந்த மாநாடு ஒருவகையில் குறிப்பிடக்கூடியதாகும். மறைந்த மாவீரன் கே. வி. கே. சாமிக்கு ஒரு கவர்னர் பதவி கொடுக்கலாம், அவ்வளவு கெட்டிக்காரர் என்று அய்யா அவர்கள் பாராட்டிய மாநாடு அது.

அம்மாநாட்டிற்கு, அண்ணு, நெடுஞ்செழியன் முதலியோர் செல்லவில்லை. கடைசி நேரம் வரையில் தான் வருவதாகச் சொல்லிவிட்டு அண்ணு அவர்கள் போகாதது பெரிய அதிர்ச்சியாயிருந்தது. அய்யா அவர்கள் கூட ஆத்திரமும் அதே சமயம், 'ஒழிந்தான்க!' என்றும் பேசினதாகச் சொன்னுர்கள்.

"என்னமாங்க பேசருன்! இந்த நெடுஞ்செழியன் எந்த மூலை?" என்று அந்த மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பியை பற்றி, அய்யாபாராட்டினுராம். அண்ணு அவர்கள் வரவில்லை என்றதும்

10-ம் பக்கம் பார்க்க


## வாணி தமிழ்-இங்கிலீஷ் போதினி




தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புத்தகத்தின் மூலம் பிறருடைய உதவி இல்லாமல் இங்கிலீஷ்படிக்கவும் பேசவும் கடிதங்கள்எழுதவும்கற்றுக்கொள்ளலாம். 704 பக்கங்கள் கொண்ட பெரியபைண்டு புத்தகம் விலை ரூ. 5வி.பி.பி.செலவுரூ.1-25

### வாணி தமிழ், இந்தி சுபோதினி

தமிழைக் கொண்டு பிறர் உதவியின்றி சுலபமாக ஹிந்தி படிக்கவும் பேசவும் கற்றுக்கொள்ளலாம். விலை ரூ, 2-25 வி.பி.பி.செலவு 75 ந.பை.

### ஐசுவரியம் (குடிசைக் கைத்தொழில்)

சோப், இங்கி, ஊதுபத்தி, வாசனைத்தைலம், ஸ்னே. பேஸ் பவுடர், சாம்பிராணி போன்ற 200 கைத்தொழில்கள் கொண்டது. விலை ரூ, 3. வி. பி. பி. செலவு ரூ 1.

### குடும்ப இலகு வைத்தியம்

வீட்டு சரக்குகளைக் கொண்டு நோய்களைப் போக்கி, ஆரோக்கியம், பலம், ஆண்மை பெறுவது போன்ற அநேக வைத்திய ரகசியங்களடங்கியது. தபால் செலவோடு ரூ. 3-50

வாணி புக் டிபோ, 3, மலைய பெருமாள் தெரு,
(தபால் பெட்டி எண்: 239) சென்னை-1.

# ஆறு

**கதிர். முத்தையா**

வான்முகட்டில் இருந்த கரு மேகங்கள் ஒன்று குவிந்து மலையின்மேல் பலத்த மழை பொழிந்தது. பாறைகளின் இடைவெளிகளிலே நீர்விழுந்து சிறு சிறு அருவிகளாக ஓடி வந்தன. காஞ்சிரமலையின் மீதுள்ள அருவிகளெல்லாம் ஒன்று சேர்ந்து அன்புநதியென்னும் பெயர்பூண்டு சமவெளி நோக்கி ஓடிவந்தன. காலத்தின் போக்கிலே பல சிற்றருவிகள் பேரருவிகள், உபநதிகள் அன்பு நதியிலே வந்து கலந்தன. ஈரோடை மலையிலிருந்து ஓடிவந்த சிறுஅருவி சம்பகமும் அன்புநதியோடு சேர்ந்து கொண்டது, எல்லாவற்றுக்கும் அன்னையைப்போல் விளங்கிய அன்புநதி தன்னுடைய இலட்சியப்பயணத்தைத்தொடங்கியது அருகிலிருந்த மரஞ்செடி கொடிகள் அசைந்தன. அதிலிருந்து தென்றல்பூத்து சில்லென்று வீசியது.

அன்புநதி பயணம் போவதைக் கண்ட தென்றல், அருகே வந்து, "எங்கே அம்மா பயணம்?" என்றது. அதற்கு அன்புநதி, "நமது சொந்த வீடாம் திருவிடத்துக்குத்தான்" என்றது.

"நானும் வரட்டுமா?" கேட்டது தென்றல்.

"தாரளமாக வரலாம் மகனே. தடையேதுமில்லை. அந்த இடம் நம் அனைவருக்கும் சொந்தமானது. சொர்க்க பூமி அது. பொன்னும் மணியும் மின்னும் வைரமும் தன்னகத்தே கொண்ட திருவிடமாம் அந்த ஆழ்கடல் நமது. அதை விரைவினில் அடைவோம், வா மகனே வா!" அழைத்தாள் அன்னை. அன்பு நதியின் பேச்சிலே பாசத்தின் முத்திரை பதிந்திருந்தது. அதன் சீரிய குணங்களை வானளாவப் புகழ்ந்தது. "அறிவுக்கோர் அன்னை" யென்றும் 'அ புக்கோர் அன்னை'யென்றும்' 'குல விளக்கென்றும் 'கொள்கை விளக்க'மென்றும்...இன்னும் எத்தனையோ அத்தனையும் அழகு தமிழ் நடையிலே அருங் கவிதையாகப் பாடிக் களித்தது.

அன்பு நதி எதையுந் தாங்கும் இதயத்தோடு கல்லிலும் முள்ளிலும் கடும் பனியிலும் கொடும் வெயிலிலும் தளராது துவளாது அழகு நடைபோட்டு, அனைவருக்கும் அறிவுரை பலகூறி கடமையை ஒரு கரையாகவும், கண்ணியத்தை மற்றொரு கரையாகவும் கொண்டு கட்டுப்பாட்டோடு போய்க் கொண்டிருந்தது.

இடையிலே ஒருநாள்...சம்பக நதியின் முகம் கருத்திருந்தது. அதைக் கண்ட அன்புநதி "ஏன் மகனே! ஒரு மாதிரியாக இருக்கிறாய்?" என்று கேட்டது.

"அம்மா! பாதையின் தன்மையோ மிகமிகக் கடுமை, இடையிலே தாங்க முடியாத வேதனைகளைச் சந்திக்க வேண்டியிருக்கிறது" என்றது.

"மகனே! வேதனையைச் சந்திக்க வேண்டியிருக்கிறதே என்பதற்காக நம்ஜீவ இலட்சியத்தை விட்டுவிட முடியுமா?"

"அது மட்டுமல்ல ... எங்கு சென்றாலும் 'அன்புநதி' 'அன்புநதி' என்று உங்களைத்தான் அழைத்துப் புகழ்கிறார்களே தவிர என் பெயரே வெளியில் தெரியவில்லை. என்னை ஏறெடுத்தும் பார்க்க மறுக்கிறார்கள்...ஆகவே நான் தனியே போகலாமென நினைக்கிறேன்."

"இல்லை மகனே. நீ தவறாக நினைக்கிறாய்."

"முடியாது அம்மா ... முடியாது, என் பாதையை மாற்றிக் கொள்ளப் போகிறேன்."

இந்த வார்த்தையைக் கேட்டதும் அன்புநதியின் கண்கள் கலங்கின. "மகனே! பழகிய பாசமெல்லாம் மறந்தாயா? என் சிந்தை மகிழ செவி மணக்கப் பேசியதெல்லாம்பொய்தானா? யோசித்துப்பார்"

"யோசிப்பதற்கு என்ன இருக்கிறது? உங்களுக்கு இருக்கக்கூடிய புகழிலே ஒரு பங்குகூட எனக்கில்லையே?"

"மகனே! என்னைப்பார்த்து ஏன் பொறாமைப்படுகிறாய்? தாயின் பெருமையிலே மகனுக்குப் பங்கில்லையா? என்னரும் புதல்வர்களில் சிறந்தவன் நீ... என்னைவிட்டுப் போகிறேன் என்கிறாயே?" அன்புநதியின் கண்களில் கண்ணீர் பொல பொலவென்று உதிர்ந்தது.

இதைக் கண்டதும், "இப்படித் தானம்மா எப்போதும்கண்ணீர்த் துளிகளைச் சிந்தி, பாசம், நேசம் என்றெல்லாம் பேசி என்னை ஏமாற்றி வருகிறீர்கள்.

"இல்லை மகனே! உன்னையா நான் ஏமாற்றுவேன்?... யாரையும் ஏமாற்ற வேண்டிய அவசியம் எனக்கில்லை. அதனால் எனக்கென்ன நன்மை? நன்கு சிந்தித்துப் பார்."

"சரியம்மா! புறப்படுங்கள்" என்றது சம்பகம். கொஞ்சதூரம் ஒற்றுமையாகச் சென்றன. வழியில் சிலுசிலுவெனக் கண்ணைப் பறிக்கும் வண்ண ஓடை வந்தது சம்பகம் அன்புநதியை நோக்கி, "அம்மா! அதுயார்?" என்றது.

அதற்கு அன்புநதி, "மகனே! அதுதான் கலையோடை. நம் பயணத்தில் நம்மோடு துணைக்கு வர ஓடி வருகிறது."

"வேண்டாம்... வேண்டாம் ... அம்மா. கலையோடையை நம்மோடு சேர்த்துக் கொள்ளக் கூடாது. நம்மால் அது இலாபம் அடையுமே தவிர நம்முடைய கொள்கைக்கு எவ்விதப் பயனும் இருக்காது" என்றது சம்பகம்.

"மகனே! என்ன நீ எப்போதும் யாரையாவது பற்றிக் குறைக் கூறிக் கொண்டே யிருக்கிறாய்? நம் இலட்சியப் பயணத்தில் சேர்பவரைக் குறித்து ஏதாவது குற்றம் சொல்லிக் கொண்டேயிருக்கிறாய்? உன் கருத்து என்ன?"

"என் கருத்தா? உங்கள் திருவிடத்தின்மீதும் உங்கள் இலட்சியப் பயணத்தின் மீதும்எனக்கு நம்பிக்கை இல்லை. இத்தனை நாள் என்னையறியாமலேயே உங்களோடு சேர்ந்துவந்து விட்டேன்! இனி நான் தனியே போகிறேன்."

"சம்பகம்! நீ வரும்போது சிறு அருவியாக ஓடி வந்தாய். இப்போது துள்ளிக் துள்ளிக் குதிக்கும் நதியாக மாறியிருக்கிறாய். இந்த நேரத்தில் 'பிரிந்து போகிறேன்' என்கிறாய். இத்தனைநாள் 'அம்மா! அம்மா' என்று அன்பு தவழ அழைத்தது ... பாராட்டியது ... வீரமாகப் பேசியது அத்தனையும் பொய்தானா? என்னை ஏதேதோ சொல்லித் தூற்றுகிறீர்கள்...பரவாயில்லை... யார் யாரோ என்னைத் தூற்றும்போது பாசத்தோடு பழகிய நீ தூற்றுவதில் வருத்தமில்லை. ஆனால் 'பிரிகிறேன்' என்ற ஒரு வார்த்தையை மட்டும் சொல்லாதே. அந்தப்பிரிவைத் தாங்கிக் கொள்ளும் வலிமை எனக்கில்லை."

அன்பு நதி அன்பால் வேண்டுகோள் விடுக்கும்போதே சம்பகம் தன்னுடைய தனிவழியில் கிளை நதியாகப் பிரிந்து சென்றது. புன்னகை பூத்தபடியே தென்றலும் அதோடு சேர்ந்து கொண்டது. அன்புநதி அவைசெல்லும் பாதையைப் பார்த்தபடியே நின்றது. உடனிருந்த அருவிகளெல்லாம், "ஏனம்மா! கவலைப்படுகிறீர்கள்? போவது ஒன்றோ, இரண்டோ...இருப்பது ஆயிரமாயிரம் ... கவலைப்படாதீர்கள்" என்றன.

நாட்கள் பல உருண்டோடின. பிரிந்துசென்ற சம்பகநதியும் தென்றலும் கொஞ்ச தூரம் ஒன்றாக இணைந்து சென்றன. அங்கே காலமெல்லாம் மக்களுக்குப்பயன் படாத காட்டாறு ஒன்றும் சோலை ஒன்றும் குறுக்கிட்டது. வரண்டகாட்டாற்றினருகில்போனதும் தென்றல் சோலையைநோக்கி ஓடியது. திகைத்த சம்பகம்,

(11-ம் பக்கம் பார்க்க

# செய்வார்களா!

கூட்டந்தான் உங்களுக்கு; ஓட்டு எங்களுக்கு என்று வீராப்பு பேசிய விருதை வீரர் இன்று, 'முதலமைச்சர்' என்ற பதவியின் பெருமையோடு நாடெங்கும் சென்று காளைமாட்டுக்கு ஓட்டு போடுங்கள் என்று கேட்பானேன் காமராசர். சாதாரண திரு. காமராசர் என்று நாடெங்கும் சென்று ஓட்டு கேட்க வேண்டும்! ஜனநாயகத்தை மதித்து ஜனநாயக முறைப்படி தேர்தல் வெற்றிபெற விரும்பினால் முதலமைச்சர் என்ற பதவியை துறக்க வேண்டும்சாதாரண திரு. காமராசராகச் சென்று மக்களிடம்ஓட்டுகேட்க வேண்டும்!

இதே போன்று நிதி அமைச்சர் பட்டத்தை—பதவியை துறந்துவிட்டு தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடவேண்டும். இதை கோவை சீமான் செய்தால் அவரது ஆற்றலுக்கும் அரசியல் நாகரீகத்திற்கும் பெருமையாகும்.

மேல் நாடுகள் சென்று அரசியலை கண்டுகளித்தவர்நிதியமைச்சர்—தேர்தல் முறைகளை பண்புகளை கேட்டு விளக்கம் பல பெற்றிருப்பார்.

பாதுகாப்பு அமைச்சர் பக்தவத்சலமானாலும் சரி, மின்சார அமைச்சர் கக்கன் ஆனாலும் சரி, அமைச்சர் வெங்கட்டராமன் ஆனாலும், மந்திரி மாணிக்கவேலர் ஆனாலும் மந்திரி லூர்தம்மாள் ஆனாலும் சரி; எல்லா அமைச்சர்களும் முதலில் மந்திரி என்ற பதவியை துறக்கவேண்டும், மந்திரி என்ற பதவிக்கு முழுக்கு போட்டுவிட்டு பொது மக்களிடம் சென்று சாதாரண உங்கள்ஊழியன் என்று சொல்லி மக்களிடம் தன் சேவையைப் பற்றி எடுத்துரைக்கட்டும்!

ஒவ்வொரு அமைச்சர்களும் பதவியைத் துறந்துவிட்டு சாதாரண காங்கிரஸ் உறுப்பினராக நின்று வெற்றி பெறட்டும். இது தான் ஜனநாயக பண்பு! ஜனநாயக முறை!

இதைச் செய்யாது தேர்தல் ஓட்டு எண்ணுகிற வரையிலும் மந்திரி என்ற பதவியைவிடாது மந்திரி, மந்திரி என்று பறைசாற்றி; அதிகாரிகளை மிரட்டி, பொதுமக்களை பலவழிகளிலும் ஓட்டு வாங்கினால் இது ஜனநாயக முறையாகாது; சர்வாதிகார முறையாகும்!

"நான் மந்திரி எனக்கு ஓட்டுப் போடு" என்று கேட்பது ஜனநாயகமல்ல; சர்வாதிகாரமாகும்!

நான் பொதுநல ஊழியன்; காங்கிரஸ் தொண்டன்; தியாகி என்று சொல்லி ஓட்டுபெறுங்கள் இது ஜனநாயகம்!

(10-ம் பக்கம் தொடர்ச்சி)

எனக்கொரு மகத்தான வாய்ப்பு ஏற்பட்டது. அதுதான், அய்யா அவர்களுடைய வாழ்க்கைச் சரித்திரத்தை ஆதிமுதல அன்று வரை எழுதும் பணியாகும்; 'ஸ்டார் பிரசுரம்' எனும் கம்பெனியினர் மிக மிகச் சிறந்த முறையில் 'பெரியார்' எனும் பெயரில் அய்யாவின்வாழ்க்கைச் சரிதம் ஒன்றை ஐந்து ரூபாய் விலையில் கொண்டுவர விரும்பினார்கள். அதை நான் அய்யாவிடம் சொல்லியபோது, அவரும் அதற்கு வேண்டிய புதிய தகவல்கள் ('தமிழர் தலைவர்' என்கிற அய்யாவின் வாழ்க்கை ஓவியத்தில் இல்லாத ஏராளமான, பல்சுவையான பகுதிகள்) படங்கள் எல்லாவற்றையும் அளித்ததோடு 'குடியரசு' ஆபீசுக்குப் போய் எந்த விபரம் வேண்டுமானாலும், எந்தப் பைல் தேவையானாலும் எடுத்துக் கொள்ளும்படியும் சொன்னார்கள்.

மிக மிக ஆர்வத்தோடு நான் இந்தப் பணியிலீடுபட்டு பாதிக்கு மேல் வரலாற்றையும் எழுதிக் கொண்டிருந்தேன். மிச்சத்தை முடிக்காமல் அய்யாவின் திருமணம் செய்து விட்டது!...

விடுதலையிலிருந்தபோது அழகிரி அண்ணன் செத்தார்கள்... சாவுக்கு அய்யா அவர்கள் போகவில்லை. அது எனக்கும் கணேசுக்கும், குருசாமி அண்ணனுக்கும்கூட ஆச்சரியமாயிருந்தது. அண்ணா அவர்கள் இப்படியெல்லாம் ஒதுங்கியது போலிருக்கிறார்கள் என்று பிறர் கருதிக் கொண்டிருந்த நேரத்தில் அழகிரி அண்ணன் அவர்கள் அய்யாவால் கழகப் பணியில் மிகவும் அக்கரையோடு பணிக்கப்பட்டார்கள்,

அப்போது வண்ணாரப்பேட்டையில் நடந்த ஒரு கூட்டத்தில், அண்ணா அவர்களின் போக்கை கண்டிப்பதுபோல்கூட, அழகிரி அண்ணன் பேசினார்கள். அப்படிப் பேசினால் அய்யாவுக்கு மனத்தெம்பு கொடுக்கும் என்பதற்காக அந்த மலையுருமாவீரர் பேசுகிறாரோ என்றுகூட நாங்கள் எண்ணினோம்!

"அண்ணா போனால் என்னடா, அழகிரியில்லியோ..." என்று கூடச் சிலர் பேசலாயினர்.

சாதாரணமானவர்களா யிருந்திருந்தால், இதைக் கேட்டு எரிச்சலும் விரோதமுமே அடைந்திருப்பர். ஆனால் அண்ணா அவர்கள் அந்தச் சமயத்திலும் அழகிரி மீது காட்டிய பற்றும் பாசமுமே என் மனக்கதவை மிக மிகத் திறந்தது! கடைசியில் நோய் வாய்ப்பட்டு தாம்பரம் சானடோரியத்தில் அண்ணன் கிடந்தபோது தன்னைக் கூட்டத்துக்கு அழைக்கும் ஒவ்வொருவரும் ரூபாய் நூறு அழகிரி அவர்கள் பெயருக்கு மணியார்டர் செய்துவிட்டு அந்த மணியார்டர் ரசீதை அனுப்பினால்தான் கூட்டத்துக்கு வரமுடியும் என்று அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு நிபந்தனை போட்டார்கள்.

கூப்பிட்டால் கூட்டத்துக்கே வரமாட்டேனென்கிறார்எனகுறைபட்ட தோழர்கள் எல்லாம் ஆங்காங்கே இந்த நிபந்தனையை வெகு வேகமாக நிறைவேற்றினர்; அப்படியெல்லாம் செய்தும் அவருடைய உடம்பு தேறவில்லை! வாழ்நாள் முழுதும் அஞ்சா நெஞ்சம் மட்டும் இருந்துவிட்டாற் போதும் அந்தநெஞ்சமிருக்கின்ற உடல் எக்கேடு கெட்டாலென்ன என்று அலட்சியமாயிருந்த காரணத்தால், நோய் அவரைச்சாவுப் படுக்கையில் போட்டு விட்டது.

இந்த நிலையில் இருப்பதோ தாம்பரம்! வீடு இருப்பதோ பட்டுக்கோட்டை!! தாம்பரத்திலிருந்து பட்டுக்கோட்டைப் போக பணம் வேண்டும். என்ன செய்வது? அவரும் அண்ணாவுக்குத் தான் தகவல் அனுப்பினார். அண்மையில் மறைந்தாரே அன்புள்ள செல்வர் டபிள்யு. கே. தேவராசன் அவருடைய காரில், அண்ணா தாம்பரம் போய், ரயிலேற்றி வீட்டுக்கு அனுப்பியதோடு, இரண்டு நாட்களுக்கெல்லாம் திருவொற்றியூர் சண்முகம் அவர்கள் வசமிருந்த சென்னைச் சுயமரியாதைச் சங்க நிதியில் ரூபாய் ஆயிரத்தை வாங்கி, தோழர் மதியழகன் அவர்கள் மூலம், ஊருக்கே அனுப்பி வைத்தார்கள்.

கலைவாணர் என். எஸ். கே. அவர்களின் ஒத்துழைப்போடு, ரூபாய் 6000 நிதிதிரட்டி, பிறகு அளிக்கப்பட்டது அண்ணாவால். இப்படிப்பட்ட உள்ளம்கண்டேன் அன்று அண்ணாவிடம்! அவர் மீதுள்ள மரியாதையைப் பன்மடங்காக்கிய ஒரு பெரிய சம்பவம் இது!!...

அழகிரி அண்ணனுடைய சவ அடக்கத்தின்போது சகோதரர் கருணாநிதி அவர்கள் திருவாரூரிலிருந்து போய்க் கலந்து கொண்டிருக்கிறார். அவருக்கு அழகிரி அண்ணன் என்றால் உயிர். அப்படிப்பட்டவர் இறந்துபிணமாகியும் அவருக்குரிய கடைசி அன்பைச் சொல்ல பெரியார் வரவில்லையே என்பது அவருக்கு ஆத்திரம். நியாயமாக இந்த ஆத்திரம் எவருக்கும் வரத்தானே செய்யும். அதிலும் அப்போதைய கருணாநிதி என்றால் வில்லிலிருந்து கிளம்பிய அம்புபோல! இப்போதாவது எதையும் பொறுக்கும் பொறுமைசாலியா இருக்கிறார்— அப்போதோ அப்பப்பா, பேச்சிலும் கனல், எழுத்திலும் கனல், எதையெடுத்தாலும் ஒரே ஆர்வம் தான்!!

(வளரும்)




ம்ழக்கம்போல் அந்த நாள் வந்துவிட்டது. அதுதான் ஆகஸ்ட் 15. ஊரெல்லாம் ஒரே கொண்டாட்டம். மூவர்ணக் கொடிகள் நீல வாணத்தை எட்டிப் பிடிக்க முயல்வதுபோல் ஆங்காங்கே உயர்ந்து கொண்டிருந்தன. கார்களும், வண்டிகளும் நில்லாது ஓடிக்கொண்டிருந்தன.

நான் வழக்கம்போல் கழக அலுவலகத்திற்குச் செல்வதற்காக பஸ் நிற்குமிடத்திற்கு வந்தேன். பஸ் முந்திவிட்டதால் பக்கத்திலிருந்த பெட்டிக் கடைக்குச் சென்று ஒரு சிகிரெட்டை வாங்கிப் புகைத்துக் கொண்டிருக்கும் போது, ஆச்சரியத்துடன்' பல ஆண்டுகளுக்கு முன்பு இந் நாட்டை விட்டுச் சென்ற சுபாஷ்சந்திரபோஸின் படத்தைக் கண்டேன்.

அதைப் பார்த்தவுடன் கடைக்காரரிடம், 'ஏன் தம்பி, இன்று ஒரு புதிய படம் தொங்குகிறதே, என்று கேட்டேன். அதற்கு 'ஆம் அண்ணா இன்று ஒரு புனித நாள் தானே' என்றான்.

திடிரென்று, "ஐயோ... ஐயோ!" என்று அருகிலுள்ள டீ கடையின் எச்சில் தொட்டியிலிருந்து பரிதாபமான அழு குரல் ஒன்று கேட்டது. சட்டெனத் திரும்பிப் பார்த்தேன். யாரோ ஒருவன் சாப்பிட்டு விட்டுப் போட்ட எச்சில் உணவையெடுப்பதற்காக சுதந்திரம் கிடைத்த இந்த நாளில் ஆவலுடன் சிலர் நின்றிருந்தனர். பக்கத்தில் நாய்களும் முறைத்துக் கொண்டு நிற்கின்றன.

எனக்கு-உனக்குஎன்றுஆவலுடன், ஆத்திரத்துடனும் கூப்பாடு அடிதடியாக மாறி அதில் அடிபட்ட ஒரு சிறுவனின் அழு குரல் தான் நான் கேட்டது. இதைப் பார்த்துக்கொண்டு உணர்வின்றி நான் நிற்க, வேறொரு 'பஸ்'சும் போய்விட்டது.

அழும் அச்சிறுவனைக் கூப்பிட்டேன். அவன் என் பக்கத்தில் வந்தான் பயந்தபடி. "உனக்குப் பெற்றோர்கள் இருக்கின்றார்களா? என்று கேட்டேன். (ஏனெனில் அலுவலகத்திற்கு ஒரு சிறுவன் தேவையாக இருந்தது) பதில் சொல்லாமல் அதிகமாக அழுதான். அவன் அழுகை அதிகமானதால் அவ்வழுகைக்குரிய காரணத்தை அறிவதற்கான ஆவல் எனக்கிருந்தது.

கையில் புகைந்து கொண்டிருந்த சிகிரெட்டை எரிந்துவிட்டு மீண்டும் உனக்குப் பெற்றோர்கள் இருக்கின்றார்களா? எனக் கேட்டேன். 'இல்லை' என்றான். கண்ணீரைத் துடைத்துக் கொண்டான். அவன் முகம் விகாரம் அடைந்தது. என்னைக் கூர்ந்துப் பார்த்தான். உரத்தக் குரலில் 'சார்' என்று அழைத்தான். என்னவென்றேன். பக்கத்தில் பறந்து கொண்டிருந்த மூவர்ணக் கொடியைச் சுட்டிக் காட்டிக் கொண்டே 'அதோ பாருங்கள் என்றான். அங்கே ஒரு மூவர்ணக் கொடி காற்றில் அழகாக அசைந்தாடிக் கொண்டிருந்தது. அவன் தொடர்ந்தான்.

'அந்தக் கொடி ஒரு காலத்தில் நாட்டின் விடுதலைக்காகவும், ஏழைகளின் உயர்வுக்கும் வழி காட்டியது. அக்கொடியைக் காப்பதற்காக நடந்த புரட்சியில் வெள்ளையரின் வெறிபிடித்தத் துப்பாக்கி கக்கிய குண்டுகளால் தாக்கப்பட்டு என் அப்பா இறந்து பட்டார்." எனத் துக்கம் தொண்டையை அடைக்க வேதனையுடன் சொன்னான். மீண்டும் தொடர்ந்து, "இன்று அந்தக் கொடி, பணக்காரர்களின் ஏக உரிமையாகிவிட்டது. இக்கொடியின் கீழ் ஆட்சி நடக்கும் இக்காலத்தில், அக்கொடிக்காகப் போராடி, உயிரிழந்த ஒரு மாவீரனின் மக்களாகிய நாங்கள் எச்சிலுணவுக்கு ஏங்கி நிற்கின்றோம்' என்றான்.

(நாங்கள் பேசிக் கொண்டிருக்கும்போது மூவர்ணக் கொடி முன் பறக்க ஒரு ஸ்டுடிபேக்கர் கார் எங்களைக் கடந்து சென்றது) அதைப் பார்த்ததும் தாங்க முடியாத வேதனை அனுபவிப்பவன் போல், அவன் சொன்னான், 'அண்ணா இந்தக் கொடியின் ஆட்சி அதிக காலம் நீடிக்காது" என்று.

அவன் கூறியது முழுவதும் கேட்டேன். ஆனால் பெரும் அரசியல்வாதி போல் அவன் கடைசியாக கூறிய, 'இந்தக் கொடியின் ஆட்சி அதிக காலம் நீடிக்காது' என்ற வார்த்தைகள் என் லட்சியத்திற்கே ஒரு தெம்பையூட்டியது.

நான் அவனிடம், 'தம்பி எங்கள் அலுவலகத்திற்கு வருகின்றாயா?' எனக் கேட்டேன். "இல்லையண்ணா என்னுடைய தங்கை அதோ அந்த எச்சில் தொட்டியினருகில் நிற்கின்றாள். அவளைப் பார்த்துவிட்டு அப்புறமாக வருகிறேன்' என்றான். அப்போதுதான் அவனுக்கொரு தங்கையுமிருக்கிறாளென்றறிந்தேன்.

உடனே, 'உன் தங்கையைக் கூப்பிடென்றேன். அதன்படி அவன் கூப்பிட்டு வந்தான். அழுக்கடைந்த கந்தல் துணியணிந்த அழகான அப்பெண்ணின் கையில் ஒரு பொட்டலம் இருந்தது. நான் அதைத் திறந்து பார்த்தேன். பல மனிதர் சாப்பிட்டுப் போட்ட மிச்சம் மீதியெல்லாம் வைத்திருந்தாள். அதைக் கண்ட எனது உள்ளத்தில் வேதனையும், துன்பச் சாயலும் தோன்றியது.

நான், 'இன்று கொடி உயர்த்தும் இடங்களில் பலகாரங்கள் வழங்குகின்றார்களே அங்கு நீ ஏன் போகவில்லை' என்று கேட்டேன். அதற்கு அப்பெண் எல்லாம் தெரிந்தவள் போல் 'அப்பண்டங்களில் பிளாக் மார்க்கெட்

(11-ம் பக்கம் பார்க்க)

## கேட்டீரா சேதி!

### அவலட்சணப் போட்டி!

"அழகான பெண்கள் நடத்தும் போட்டி யென்கிறார்களே! போவோம்!! நம்மையா தேர்ந்தெடுக்கப் போகிறார்கள் என்றுதானய்யா, போனேன். ஆனால் என்ன அக்கிரமம் என்னை 'முதல் வனாகத் தேர்ந்தெடுத்து விட்டார்கள்" என்று 36 வயதுள்ள அந்த வாலிபன் அழுதானாம்!! அழகிகள் தேர்ந்தெடுத்ததற்காக— அழுதானா—ஏன் அவன் அழ வேண்டும்—அடித்தது சான்சு என்றன்றோ ஆனந்தப்பட்டிருக்க வேண்டும், என்றே கேட்பீர்கள். அழகிகள் நடத்திய போட்டி ஆணழகனைத் தேர்ந்தெடுக்க அல்ல; அவலட்சணம் யார் என்பதைத் தேர்ந்தெடுக்க! 1961 ன் முதல் நம்பர் அவலட்சணம்' என்ற பரிசு, மேரியோ சென்டாரின் என்ற வாலிபனுக்குக் கிடைத்தது! பிறகு அழாமலாயிருப்பான்!! இத்தாலியிலுள்ள ஒரு கிராமத்தில்தான், அண்மையில் இப்போட்டி நடந்தது. அந்த வாலிபன் கிராமத்தில் தச்சுத் தொழில் செய்துகொண்டிருந்தவனும்.

* * *

### கழுதை நிறுத்தியது ரயிலை!

ஆமாம், ஒரு கழுதை, ஒரு ரயிலை ஓடவிடாமலே செய்துவிட்டது. அரை மணி நேரம், ரயிலோட்டியும், பிரயாணிகளும் திண்டாடி திக்குமுக்காடினார்களாம். பஞ்சாபிலுள்ள சலந்தர் என்னுமிடத்திற்கும் கர்தாபூருக்கும் இடையில் தண்டவாளத்தில், படுத்திருந்ததாம் அந்தக் கழுதை இரயிலோட்டி, விசிலை, அடித்துப் பார்த்திருக்கிறார். நகரவில்லை. கீழே இறங்கிப் போய் கழுதையை எழுப்பித் துரத்தியிருக்கிறார்கள். கழுதை, தண்டவாளத்தைத் தாண்டி அந்தண்டை ஓடவேண்டியதுதானே? நாலுகால் பாய்ச்சலில், தண்டவாளத்திலேயே ஓட்டம் பிடித்ததாம்! எவ்வளவுதூரம் துரத்தினாலும், கீழே இறங்காமல் தண்டவாளத்திலேயே ஓடியதாம்! என்ன செய்ய முடியும்? இரயிலை ஓட்ட முடியாமல், ஒருவழியாக அரை மணி நேரம் போராடி அதற்கா மனம் வந்து, ஒரு பக்கமாக இறங்கிப்போன பிறகே, வண்டியை விடமுடிந்ததாம்.

* * *

### ஐ. நா. போண்டியாகும்!

ஆமாம்—1962-க்குள் ஐக்கிய நாடுகள் சபைக்கு இருபதுகோடி ரூபாய் கடன் வருமாம். இதுதான் 'லிமிட்'—இதைத் தாண்டிவிட்டால், என்ன செய்தாலும், ஐ.நா சபையை, ஒழுங்காக நடத்துவது என்பது கடினமாகும் என்று இலண்டன் பார்லிமெண்டில் லார்டு கீத் என்பவர் வெளியிட்டு இருக்கிறார். பல நாடுகள் தாங்கள் செலுத்தவேண்டிய ஆண்டுக் கட்டணங்களை ஒழுங்காக செலுத்தாததே, இதற்குக் காரணம். அதோடு காங்கோ, மத்திய கிழக்கு முதலிய இடங்களில் ஏற்பட்ட செலவு கொஞ்சம் அதிகமாகிவிட்டதால், உலகத்தையே காக்கும் அச்சபை, 'உதவுவாருண்டோ?' என்று ஏங்கும் கட்டத்தில் உள்ளதாம்!!

* * *

### பூனைக்காக!

எழுபது அடி உயரமுள்ள பெரிய மரம் ஒன்றை இங்கிலாந்திலுள்ள ஒரு இடத்தில்,பூனையொன்றுக்காக வெட்டி வீழ்த்தியிருக்கிறார்கள்! அந்த மரத்தின் உச்சியில், ஒரு கிளையில் போய் உட்கார்ந்துகொண்டு அப்பூனை, இறங்க மறுத்ததாம். எவ்வளவோ தந்திரமாக அதைக் கீழே இறங்கும்படி முயற்சிசெய்தும்முடியவில்லையாம். பூனையோ அருமையாக வளர்க்கப்பட்டது! ஒரு நாளல்ல, இரு நாளல்ல, ஆறு நாட்கள் அதே மரக் கிளையில் இருந்ததாம், அப்பூனை. கடைசியில் வேறு வழியில்லை யென்று, மரத்தை வெட்டி வீழ்த்தி, பூனையைப் பிடித்திருக்கிறார்கள்.

* * *

### ஓடும் பாங்க்!

ஓடுகின்ற இரயிலில் ஒரு பாங்கியை நிர்மாணித்திருக்கிறதாம்—பாகிஸ்தான் சர்க்கார். கைத்தொழில் கார்பரேஷன் சார்பில் அமைக்கப்பட்டிருக்கிற இந்தப் பாங்கியில் சகல விதமான பாங்கி அலுவல்களும் செய்யப்பட்டிருக்கிறதாம். தினசரி ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடம் வரைக்கும் இந்த பாங்கி போய்ப்போய் திரும்புமாம். இதனால் பாங்கிகள் இல்லாத ஊர்களுக்கு வசதி ஏற்படும் என்பதற்காக இந்த ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறதாம்.

—0—

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பலபேர் கழகத்தில் அண்ணாவின் இடம் தனக்கு, நெடுஞ்செழியன் இடம் எனக்கு என்றெல்லாம் கணக்குப் போடலானார்கள். அப்போது அண்ணா அவர்கள் அம் மாநாட்டிற்குப் போகவில்லை என்று கேட்டதும் நான்கூடப் பயந்தேன்! அண்ணா அவர்கள் மீது ஏனையோர் சொல்லும் 'குற்றச் சாட்டுகள்கூட உண்மை தானோ என்று நினைத்தேன்!

ஒரு மாநாட்டுக்குப் போக முடியாத அளவுக்கா கே. ஆர். ராமசாமியின் நாடகக் கம்பெனி ஒரு மாபெரும் தளபதியைத் தடுத்து விட்டது என்று வாதிட்டேன்! ஆனால் அண்ணா அவர்கள் போகாததன் காரணம் பிறகே, புரிந்தது.

"மாநாடுகள் என்றால் ஒரு விழாபோல் முடிந்துவிட்டால் போதும் என்று அய்யா அவர்கள் கருதாமல், உண்மையில் இலட்சிய சித்திக்கான செயல்கள் வரையறுக்கப்படுகின்ற இடம்" என்று கருத வேண்டுமென்பது அண்ணாவின் கருத்தாகும்.

அய்யா அவர்களுக்கே அங்கே மாநாடு, இங்கே மாநாடு, இந்தி கிடைக்குமா எதிர்ப்புமாநாடுகூட குறள் கிடைக்குமா ஆதரவு மாநாடு போட, என்கிற ஆர்வமும் ஆசையும் அதிகமாகி வளர்ந்ததே ஒழிய, வளர்ச்சியை அணை போட—செம்மைப்படுத்த—வர வர ஆசை குறைந்து கொண்டே வந்தது!

ஜனநாயக மலர்ச்சிக்கு இது வழிசெய்யாதே,காட்டாறுபோலக் கிளம்பி கடைசியில் ஆர்வம், வீணாகத்தானே இவ்வழிகள் கொண்டு போய்விடும். இதை எப்படி எடுத்துரைப்பது? வாதிடலாம், அய்யாவிடம். விளைவு என்ன? பழியும் இழிவும்தான் பரிசாகக் கிடைக்கும்? அதிலும், நமதியக்கத் தோழர்கள், அய்யாவை "தந்தை" என்று மதிக்கிறவர்கள்.

"ஆ! தந்தையை யாடா, எதிர்க்கிறாய்?" என்று ஆத்திரம் கொள்ளக்கூடியவர்கள். கருத்தைத் தெரிவிப்பதே எதிர்ப்பு என்று கருதப்படும். என்ன செய்ய முடியும்?

இப்படிப்பட்ட சமயங்களில் எவருக்கும் சலிப்புவரும்! அந்தச் சலிப்பு அதிகமாகும் போது, "அடச்சே! இந்தக் கட்சியிலிருப்பதற்குப் பதில் நமக்கு ஒரு கட்சியா கிடைக்காது?" என்று மனம் தாவும். ஆனால் நாம் பேசும் கொள்கைகள் அண்ணாவினால் தாலாட்டப்பெற்றவையன்றோ! எப்படிக் கொள்கைகளை அவரால் இழக்க முடியும்? மிக மிக வேதனையான கட்டம் தான் அது!!

அப்போதெல்லாம் அண்ணா அவர்கள் திருச்சியில் அடிக்கடி தங்குவார்கள். தோழர் என். சங்கரன் அவர்களின் இல்லமே, அவர் இருப்பிடமாகும், திருச்சியில் ஒரு சமயம் ஒரு வெற்றிலைப் பாக்குக்கடை வைக்க அண்ணா இடமும் பார்க்கச் சொன்னார்களாம். ஒரு நல்ல இடத்தில், 'அண்ணாதுரை எம். ஏ.' வெற்றிலை பாக்குக்கடை" என்று போர்டு போட்டுவிட்டு உட்கார்ந்து விடுவது—கடைக்குவரும்வாடிக்கைக்காரர்களின் மனதில் கழகக்கொள்கைகளை எடுத்துச் செல்வது—இப்படியே கழகப் பிரச்சாரத்தைச் செய்து கொண்டிருப்பது என்கிற முடிவுக்கு வந்தாராம். சலிப்பு வந்தபோதும்கூட தன்னாலான கழகப் பணியைச் செய்வதென்கிற திடசித்தத்தில் அண்ணா இருந்திருக்கிறார்!

இதைக் நான் கேட்டபோது, ஆச்சரியப்பட்டேன். கிரேக்க நாட்டு சாக்ரடீஸ் தன் கொள்கைகளைச் சொல்ல ஆட்களைத் தேடுவாராம்—எங்கே சந்தை கூடுகிறதோ அங்கே போய் நின்று கொண்டு—பேசுவாராம்! அந்த உதாரணமே எனக்கு கவனம் வந்தது அப்போது!!

தன் மனதை உறுத்திக் கொள்வது வருத்தம் அதிகமாகும் போது இலைமறையாக எழுத வேண்டியது (ராஜபார்ட், மரத் துண்டு, முதலிய கட்டுரைகள்) என்றுதான் அண்ணா இருந்தாரே ஒழியஓடிவிடலாம், ஒதுங்கி விடலாம் என்று ஒருபோதும் எண்ணவேயில்லை.

அண்ணா தூத்துக்குடி மாநாட்டுக்குப் போகாததை வைத்து என்னென்னமோ, சொன்னார்கள். அண்ணன் குருசாமி அவர்கள் தான் இரயிலில் பட்டுவந்த அவதியைச் சொல்லி அண்ணா வராமல் உட்கார்ந்து விட்டாரே என்று அங்கலாய்த்தார்கள்.

திராவிட கழகமாயிருந்தபோது தன் மனநிலையை வெளிப்படையாக, அண்ணா காட்டிக் கொண்டது, இந்தியத் துணை கண்டத்துக்குச் சுதந்திரம் வந்தபோது அதை வரவேற்று, "ஆகஸ்டு15" என்று எழுதியதாகும். அதைக்கூட அண்ணா எழுதாமல் விட்டிருந்தால், இன்று இன்னும் பெரிய பழிக்கு நாம் ஆளாகியிருப்போம்! அதற்கடுத்தபடியாக அவர் துணிவுடன் தன் மனநிலையை உணர்த்தத் தேர்ந்தெடுத்தது தூத்துக்குடி மாநாடாகும்!! அய்யாவைச் சுற்றியிருந்தோர் அண்ணாபோகாததைப் பெரிய மகிழ்ச்சியான தோர், சம்பவமாகக் கருதினார்கள். ஆனால் அய்யாமுதலில்ஆத்திரப்பட்டாலும், பிறகு உண்மையை உணராமலில்லை. அப்படி யுணர்ந்ததால், ஈரோட்டில் தனிமாநாடு ஒன்றுகூட்டி,அதற்கு அண்ணாவையே தலைமை தாங்கச் சொல்லி, இதோ! என்பெட்டி சாவியைக் கொடுத்துவிட்டேன் என்று சொன்னார்கள். பெட்டியும் சாவியும் எப்போதும் அய்யாவிடம்தானிருந்த தென்றாலும், அண்ணாவிடம்தான் எதையும்தர விருப்பதாகவும், இதோ தந்துவிட்டேன் என்றும், பிறருக்கு மெய்ப்பிக்க அப்படிச் சொன்னார்கள்.

அப்பப்பா! அப்போது மனம் குளிர்ந்தோர் ஏராளமுண்டு. அய்யா வென்றால் அய்யாதான், என்று அகம் களித்தோரில் நானும் ஒருவன். சூழ்ந்துவந்த மேகங்கள் தூரவிரட்டப்பட்டு விட்டன என்றே கருதினேன். இப்படிப்பட்ட ஆனந்தமான நேரத்தில்

(9-ம் பக்கம் பார்க்க

## அறப்போர் அளிக்கும் கழக மலர்

பாதுகாக்க வேண்டிய களஞ்சியம் | பயன்தரும் கட்டுரைகள்! வரலாறுகள்!

**17-9-61 அன்று கிடைக்கும்**

**பக்கம் 48** (புத்தக அளவு) **விலை 50 காசு**

விற்பனையாளர்கள் 25 சதவிகிதம் கழிவு நீக்கி, 8-ந் தேதிக்குள், முன்பணத்தோடு எழுதுக.

அஞ்சல் மூலம் ஏடு பெற்றுவரும் விற்பனையாளர்களுக்கு பதிவு அஞ்சலில் மலர் அனுப்பப்படும்.

சந்தாதாரர்கள் 50 காசு தபால் தலைகள் அனுப்புக.

பொறுப்பாளர்.


(9--ம் பக்கத் தொடர்ச்சி)

வாடை அதிகமாக இருக்குமென்றாள். "மாலையில் அலுவலகத்திற்கு வாருங்கள்" என்று சொன்னேன். அவர்கள் 'சரி' என்று சொல்லித் திரும்பிப் போய்விட்டனர்.

ஐயோ, பாவம்: அந்தப் பெண்ணின் கையிலிருந்த எச்சில் உணவிற்கு உரிமையுள்ளவன் நான்தான், நீயேன் கொண்டு செல்கின்றாய் என்பதுபோல் குறைத்துக்கொண்டே ஒரு நாய் அப் பெண்ணின் மீது தாவியது. அவள் அய்யோ என்று அலறியவாறு நிலத்தில் வீழ்ந்தாள். நாய் அவள் கையிலிருந்த பொட்டலத்தைக் கவ்விக்கொண்டோடியது அப்பையன் அந்நாயை ஓட ஓட கல்லால் அடிக்க, நாய் அப்பொட்டலத்தைப் போட்டுவிட்டு ஓடியது.

அவன் அதை எடுத்துக் கொண்டு வருவதைப் பார்த்தால் யாராலும் சாதிக்க முடியாததை அவன் சாதித்துவிட்ட பெருமிதம் மிடுக்கு — அவன் நடையில் தோன்றியது. இதைக் கண்டு மனம் வெதும்பிய நான், பகலுணவுக்கும் பஸ்சுக்கும் வைத்திருந்த ஒரு ரூபாயை அவனிடம் கொடுத்தேன்.

நீங்கள் மாலையில் கழக அலுவலகத்திற்கு வாருங்கள்—என்று சொல்ல, அந்த எச்சிலுணவிற்குச்சொந்தக்காரர்களே அவ்விடம் விட்டகன்றனர். என் உள்ளத்தில் அவர்களைப் பார்த்தபின் எழுந்தது ஒரு வினா. "இன்று எச்சில் உணவுக்கு இவர்கள் உரிமை கொண்டாடுகிறார்கள்; நாளை?"

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

"தென்றலே! எங்கேபோகிறாய்?" என்றது.

"உனக்கும் உன் தனிவழிக்கும் என் அனுதாபங்களே. நான் உன்னோடு வரமாட்டேன். நான் என்றென்றும் உன் அனுதாபியாகவே யிருக்கிறேன்" என்று கூறியது.

சம்பகம் எதிரே நோக்கியது. காட்டாற்றில் எப்போதோ வந்த வெள்ள நீர் சாக்கடையாகத் தேங்கி நின்றது. உடனே தென்றலை நோக்கி "அடபாவி! அண்டிக் கெடுத்தாயே! ஆசை வார்த்தைகள்கூறி மோசஞ் செய்தாயே! என் அன்னையிட மிருந்தும் என் அன்புச் சகோதரர்களிட மிருந்தும் என்னைப் பி[illegible]த்தாய்! இப்போது என்னைவிட்டுப் பிரிந்து செல்கிறாய்" என்றது. அதற்குள் தென்றல் அருகேயிருந்த சோலைக்குள் ஓடி மறைந்தது.

"அன்னையைப் பழித்தும் இழித்தும் கூறிய என்க்கு இதுவும் வேண்டும். இன்னமும் வேண்டும். என் வாழ்வு என்னைப்போன்றவர்களுக்கு ஒருபாடமாகட்டும்" என்று அழுதுகொண்டே சாக்கடையில் சென்று விழுந்தது. அதோடு அதன் தூய தன்மையும் கெட்டது. வசந்த காலம் முடியும்வரை சோலையிலே ஆட்டம் போட்ட தென்றல் காலம் மாறியதும் இருந்த இடம் தெரியாமல் அழிந்தது.

ஆதவன் நம்பிக்கை என்னும் ஒளியோடு எழுந்தான். அன்பு நதி தன் சகாக்களோடு சென்றது. "இலட்சியப் பயணம் முடிய இன்னும் கொஞ்சதூரமே இருக்கிறது" என்றஉறுதியோடு தெளிந்த நெஞ்சத்தோடு ஒன்றுகச் சென்றன.

* * *

2-ம் பக்கத்தொடர்ச்சி

காதினிலே"—என்று பாடினர் அவர்!

அந்தத் தமிழ்—செக்கிழுத்த சிதம்பரனர் தினந்தினம் போற்றிய குறளைக் கொண்ட தமிழின் குரல்வளை நெறிக்கப்பட்டு தேவநாகிரி எழுத்து 'திக்விஜயம்' செய்ய வேண்டுமாம்! இதைப் பற்றி நமது கல்வியமைச்சரைக் கேட்டதற்கு, "அப்படியொரு யோசனை முதலமைச்சர்கள் மாநாட்டில் பேசப்பட்டது உண்மை. ஆனல் அது, அமுலுக்கு வரும் என்று யாரும் அஞ்சவேண்டியதில்லை" என்று அபயம் அளித்திருக்கிறார். அதுவரையில் மகிழ்ச்சியே யாயினும், இப்படி தேவநாகரியைப் புகுத்த வேண்டும் என்கிற எண்ணம் ஏற்படுவானேன் வடநாட்டு முதல்வருக்கு! அதுதான் இந்திய ஒற்றுமைக்கு வழி என்பதால் தானே!!

இதே வாதம் நாளைக்கு வலியுறுத்தப்படுமாயின் என்ன செய்வார் அமைச்சர் சுப்ரமணியம்? அன்புள்ள தமிழரானல், அக்கிரமம் சகியேன் என்று காங்கிசை விட்டு வெளியேறி வரமுடியுமே ஒழிய, வேறென்ன செய்ய இயலும்? அப்படி அவர் வெளியேறிடின் அடுத்த வினடியே, பூண் போட்டு புனுகு தடவி எண்ணெயிட்டுக் கொடுத்த 'அடக்குமுறை' என்கிற தடி, அவர்மீதும் பாயாதென்பது என்ன நிச்சயம்!

சிங்கம், தங்கம் செயலுக்கொரு சின்னம் என்று போற்றப்பட்ட ஷேக் அப்துல்லா, காஷ்மீரத்து உரிமைகளைக் கொஞ்சம் அதட்டிக் கேட்க ஆரம்பித்ததும், போடு பிடித்துச் சிறையில், என்றன்றே சொன்னது டில்லி? இன்னம் வாடுகின்ற நிலைதானே அவருக்கு!!

சதையும், எலும்பு போட்டு வெறியூட்டப்பட்டுவிட்ட பிறகு புலியென்ன செய்யும்? புள்ளிமான் இது! பசு இது!!— என்று, பார்க்கும். அப்படிப்பட்ட கொடும் புலிபோல் வடபுலத்தை ஆக்கிடவே இங்குள்ள வக்கீல்கள் வாதாடுகிறார்கள்! வம்புக்கும் வருகிறார்கள்!! அவர்களுக்குப்பாடம் தர பைந்தமிழ் நாட்டினரே, இன்றுமுதல் நம் இதயத்தைப் பக்குவப்படுத்திக் கொள்ளவேண்டும். அன்றில் நிச்சயம்காங்கிரஸ் கட்சியின் 'ஏக இந்தியா' எனும் கட்டாரி நம்மீது பாயும்! நம் இன்பத் தமிழைச் சாய்க்கும்! நமக்கு இடமில்லாது இவ்வுலகை விட்டே ஓட்டும்!!

—0—

அறப்போர்—வளர அன்புடன் சந்தா அனுப்பிய உடன் பிறப்புகள்:

74. எஸ். சண்முகம், நிலக்கோட்டை
75. அன்புச்செல்வன் திருவாளப்புத்தூர்
76. என். கந்தசாமி மஞ்சானல் ஏ. பி
77. கதிர்முகமது, மைலம்பட்டி
78. நாராயணன் முனுகாபேட்டை
79. எஸ். வி. மணி சாலப்பாக்கம்
80. திராவிட இளைஞர் மன்றம் நாமகிரிப்பேட்டை
81. கா. பெருமாள் 56—ஏ. பி. ஓ
82. பி. ஆர். மச்சலம் எம். சூரக்குடி
83. தி. நீ. பெருமாள் நாடார் குனியமுத்தூர்
84. இரா. வெங்கிடசலம் மேல்மட்டைவிண்ணமங்கலம்
85. திருமதி. கண்ணம்மாள் செம்பகப்புத்தூர்
86. இரா. இளம்பரிதி கோயமுத்தூர்
87. அப்புராசு கோட்டப்பட்டி
88. டி. சன்ராசன் சேடர்பாளையம்
89. செயலாளர் தி. மு. க பாகூர்
90. எம். ஜி. ஆர். படிப்பகம் நீலகிரி
91. கே. துக்காராம், ஓசூர்
92. கே. பி. நூர்முகமது லோகண்டிகுடா
93. ப. பவானுதாஸ் கொடுர்
94. பெ. பெரியசாமி அலங்காநல்லூர்
95. சி. ராயர் கொல்லுமேடு
96. டாக்டர் ராதாமணாளன் மன்னார்குடி
97. ச. சே. சிவப்பிரகாசம் திருப்பாச்சேத்தி
98. செயலாளர், பாண்டியன் படிப்பகம், டி. சேடப்பட்டி
99. து. அகோரம் தில்லையாடி
100. உ. சிவலிங்கம் மணிவிழுந்தான்

* * *

## வருந்துகிறோம்

ஈரோடு 'குடியரசு' நிர்வாகியும், பெரியார் அவர்களின் வலக்கரம் போலவும் இருந்த பெரியவர் என். கரிவரதசாமி அவர்கள் கடந்த 22—8—61 அன்று காலமாகிவிட்ட செய்தி அறிந்து மிகவும் வருந்துகிறோம். அவரது பிரிவால் வருந்தும் குடும்பத்தாருக்கும் மகனர் எதுராசுக்கும் நம்முடைய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்.

# கேள்வி பதில்

கேள்: (அ) பெரியார் இப்பொழுது காங்கிரஸ் பொதுக்கூட்டங்களில் மேடை ஏறிப் பேசி வருகிருரே! இதை காங்கிரஸ் மேலிடம் அனுமதிக்கிறதா?

(ஆ) இந்திய அரசியல் சட்டத்தில் மாநிலங்கள் விரும்பினுல் பிரிந்து தனியரசாகக் கூடிய உரிமை இருக்கிறதா? இல்லேயெனில் பிரிந்து செல்லும் உரிமை எவ்வாறு பெற முடியும்?

(இ) அண்மையில் தர்மபுரியில் நடந்த புதுக்கட்சி நிர்வாகக் குழுக் கூட்டத்தின்போது அந்தக் கட்சியின் 'ஆதரவாளத் தலேவர்' மும்முறை வெளியேற்றப்பட்டார்! உங்களுக்குத் தெரியுமா?

கா. பெ. நாதன்,
காரிமங்கலம்,
(சேலம்)

பதில்: (அ) தேர்தலில் வெல்ல, எங்கிருந்து உதவி கிடைத்தாலும், பாராதது போலிருந்து விடும் டில்லி.

(ஆ) விரும்பினுல் பிரியக்கூடிய உரிமை இந்தியச் சட்டத்தில் இல்லே!!

ஏதாவது ஒரு மாற்றம் அமைப்பில் செய்ய விரும்பினுல், பார்லிமெண்டில் மூன்றிலொரு பங்கு ஆதரவைப்பெற வேண்டும்.

அப்படி நாம் பெற முடியுமா என்று நீங்கள் கேட்கலாம். நேருவுக்குப் பிறகு நிஜனக்காததெல்லாம் நிச்சயம் நடக்கும். அவ்விதம் நடக்காமற் போனுலும், வலிவும் சக்தியும் 9 கோடிக்கு மேற்பட்ட ஒரு பகுதியில் அதிகமானுல் எந்த வல்லரசும் சும்மாயிருக்க முடியாது. பொட்டிசீராமலுபிணமாகுமுன் பெரிய தலேவர் பிரகாசம் வாதாடியும், "சேச்சே! அது எப்படி?" என்றுதான் சொன்னுர்கள் டில்லியினர். மாராட்டிய, குஜராத் மாநிலங்கள் உருவாக டில்லி உடனே சம்மதித்துவிடவில்லே, இன்னென்று இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்கவும் பிரிட்டன் உடனேயா சட்டம் செய்தது!!

உரிமையைக் கொடுப்பது ஒருவிதம், எடுத்துக் கொள்வது இன்னெருவிதம். கொடுப்பவன் நியாயவான், எடுத்துக் கொள்பவன் புத்திசாலி.

(இ) எனக்குத் தெரியாது. ஆனுல், ஏதோ தலேவருக்கும் ஆதரவாளருக்கும் 'கார் விஷயத்தல்' மாடியிலிருந்து சம்பத்து கூப்பிட்டும் கண்ணதாசன் மறுத்துவிட்டுப்போனுர் என்று தர்மபுரிபிலிருந்து ஒரு தோழர் கடிதம் எழுதியிருந்தார் எனக்கு. கவிஞருடைய சுபாவத்துக்கும் அந்த இடத்துக்கும் நிச்சயம் ஒத்துவராது என்பது எனக்கு உறுதியாகத் தெரியும்.

* * *

கே: அண்ணல் அண்ணு! நமது பேராசிரியர் அன்பழகன் தொழிற்சங்கச் செயலாளர் பதவியை ஏன் இராஜினுமா செய்தார். பத்திரிகைகள் பலவாருக திரித்துக்கூறி எழுதுகின்றனவே. உண்மை நிலேயை அறிய விரும்புகிறேன்.

ப. இ. இளங்கோ,
குர்லா,
பம்பாய்.

ப: தொழிற் சங்கச் செயலாளருக்கு வர வர வேலேகள் அதிகமாகின்றன. எங்காவது ஒரு ஊரில் முன்கூட்டியே கூட்டத்துக்கு ஒத்துக்கொண்டு அதே நாளில் எங்காவது ஒரு இடத்தில் தகராறு என்ருல் இரண்டில் எதையாவது ஒன்றைக் கவனிக்க முடியாத இக்கட்டான சூழ்நிலே உண்டாகிறது. தற்போதுள்ள நிலேயில் அன்பழகனுருடைய பிரச்சாரப்பணி முக்கியமானதாகும். அதனுலேயே அவர் விலகினுர்! பெருந்தன்மையான இந்தக் காரியத்தைப்பற்றிப் பிதற்றும் ஏடுகளே ஏனய்யா படிக்கிறீர்கள்...எவ்வளவு சொன்னுலும் பித்தலாட்டச் செய்திகளேப் படிக்கும் ஆசையைக்கூடவா விடக்கூடாது?

* * *

கே. நம்மையாண்ட வெள்ளேயர்களின் நாடான இங்கிலாந்துக்கு ஆதியில் வேறு பெயர் இருந்ததாமே? அந்தப் பெயர் என்ன அண்ணு?

ஆதிமூலம்,
பண்டாரவாடை.

ப: 'அல்பியான்' — என்பதுதான் இங்கிலாந்தின் பழைய பெயர்! அல்பியான் என்ருல், வெள்ளே நிறம்' என்று பொருளாம். இங்கிலாந்தின் ஓரம் ஏராளமான வெள்ளேப்பாறைகள் இருப்பதால் இந்தப்பெயர் இருந்ததாம்.






ஆசிரியரும், வெளியிடுபவரும்: இராம. அரங்கண்ணல், 12- 3. வது குறுக்குத்தெரு சென்னே 24.
அச்சிட்டோர் எம். பி. சத்தியமூர்த்தி முல்லே அச்சகம் 3-40 மவுண்ட்ரோடு சென்னே-6